**செ.வெ.எண்:09** **நாள்:03.02.2017**

**மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் ஆபத்து ஏற்படுத்தக்கூடிய கருவேல் மரங்களை அகற்றிட பொதுமக்கள் முன்வர வேண்டும் என அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் வேண்டுகோள்.**

கரூர் நகர மற்றும் தாந்தோணி ஒன்றியப்பகுதிகளில் திருமாநிலையூர், செல்லாண்டிபாளையம், சுக்காலியூர், பெரியார் வளைவு, சின்னாண்டான்கோவில், சேலம் புதிய பைபாஸ் சாலை ஆகிய பகுதிகளில் கருவேல் மரங்களை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப.,அவர்கள் இன்று (03.02.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

கருவேல் மர விதைகள் எத்தகைய பூச்சிகளுக்கும் இரையாகாமல் 10 ஆண்டு காலத்திற்கு பின்னும் முளைக்கும் வீரியம் கொண்டவை. எத்தகைய வறண்ட நிலப்பரப்பிலும் 12 மீ உயரம் வரை வளரும் தன்மையுடையது. இம்மரத்தினுடைய வேர்கள் மழைநீரை பூமிக்குள் செல்லவிடாமல் தேங்க வைத்து வருகிறது. நிலத்தடி நீரை உறிஞ்சி வேளாண்மைத்தொழிலுக்கு தீமை விளைவிக்கிறது. இதன் நஞ்சு மிகுந்த முட்கள் விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் ஆபத்தை விளைவிப்பவை. இம்மரங்கள் அதிக அளவு கரியமிலவாயுவை வெளியேற்றுவதால் சுற்றுப்புறசூழல் அதிக விஷத்தன்மையுடையதாக மாறிப்போகிறது. இதனை விறகாக பயன்படுத்தும்போது ஏற்படும் புகை ஆஸ்துமா, மூச்சுத்திணறல் முதலான நோய்களை ஏற்படுத்துகிறது. இத்தகைய ஆபத்தை விளைவிக்கக்கூடிய கருவேல் மரங்களை அகற்றிட மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக போர்க்கால அடிப்படையில் பணிகள் முடுக்கிவிடப்பட்டு பொது இடங்களில் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களும் தங்களது நில உடமைகளில் உள்ள கருவேல் மரங்களை 3 நாட்களுக்குள் அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும். தவறினால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகம் மூலம் அகற்றி விட்டு அதற்கான செலவுத்தொகையை இரண்டு மடங்காக நிலத்தின் உரிமையாளரிடமிருந்து வசூலிக்க மாண்பமை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அவசரம் மற்றும் அவசியம் கருதி தாமாகவே முன்வந்து கருவேல் மரங்களை அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில்,வட்டாட்சியர் திரு.துரைசாமி உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**